சுருக்கம்

படிகள் - நகர ஈட்டுப்படி - திருநெல்வேலி நகரத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகின்றது.

---

**நிதி(படிகள்)துறை**

அரசு ஆணை(நிலை) எண் : 420 நாள் : 11-09-2000

விக்ரம, ஆவணி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2031.

படிக்கப்பட்டது :

அரசு ஆணை(நிலை) எண் 162, நிதி(ஊ.பி)துறை, நாள் 13-04-98.

-::-

ஆணை :

தற்பொழுது சென்னை மற்றும் திருச்சி, சேலம், கோவை, மதுரை ஆகிய நகரங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கப்பட்டு வருகிறது. பார்வையில் கண்டுள்ள அரசாணையில் நகர ஈட்டுப்படியின் விகிதங்கள் திருத்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. திருச்சி மற்றும் சேலம் நகரத்தில் பணிபுரிபவர்களுக்கு வழங்கப்படுவதுபோல் திருநெல்வேலி நகரத்தில் பணிபுரிபவர்களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப்பட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் அரசுக்கு கோரிக்கை வைத்தது.

2. மேற்படி கோரிக்கையினை அரசு பரிசீலித்து ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி ***திருநெல்வேலி மாநகரம் மற்றும் அதைச் சுற்றி 16 கிலோ மீட்டர் எல்லைக்குட்பட்ட இடங்களில்*** பணிபுரியும் அலுவலர்களுக்கு பின்வருமாறு நகர ஈட்டுப்படி வழங்க அரசு ஆணையிடுகிறது :-

| அடிப்படைச் சம்பளம் | நகர ஈட்டுப் படி |
|---|---|
| 1. ரூ. 3000/-க்கு கீழ் | ரூ. 45/- |
| 2. ரூ. 3000 -- 4499 | ரூ. 65/- |
| 3. ரூ. 4500 -- 5999 | ரூ. 100/- |
| 4. ரூ. 6000/- ம் அதற்கு மேல் | ரூ. 180/- |

இந்த ஆணை பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து நகர ஈட்டுப்படி வழங்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கிரிஜா வைத்தியநாதன்**
அரசு சிறப்புச் செயலாளர்

பெறுநர் :

அனைத்து அரசு செயலாளர்கள்.

தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்.

அனைத்து துறைத் தலைவர்கள்.

அனைத்த மாவட்ட ஆட்சியர்கள்.

அனைத்து மாவட்ட நீதிபதிகள்.

மாவட்ட கணக்காயர், சென்னை-18/35.

கருவூல கணக்கு ஆணையர், சென்னை-15

அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்.

அனைத்து கருவூல அலுவலர்கள்.

அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.

அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.

இருப்புக் கோப்பு / உதிரிகள்.

/ ஆணைணப்படி : அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்